2025 – ஜனவரி மாதம் 02–ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

***எம் சி ஓ பி நெம்பர்*** : 264 / 2023

*2025 – ம் ஆண்டு ஜனவரி மாதம் 02 –ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரரர் தரப்பு சாட்சியாகிய RW1 , வது நபரின் வாக்குமூலம் (1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா, Gr.II Bench Clerk அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 1, ப. பாரதி |
| தகப்பனார் பெயர் | : | பழனிச்சாமி |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | இளநிலை உதவியாளர் |
| வயது | : | 26 |

***தேதி : 02.01.2025.***

***முதல் விசாரணை :–***

நான் தற்போது பெரம்பலூர் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகின்றேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியம் அளிக்க எனக்கு வழுங்கப்பட்ட அனுமதிக்கடிதம் **எ.சா.ஆ.1**, இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட T N 61 U 8437 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **எ.சா.ஆ.2,** மேற்படி எ.சா.ஆ.2 ஆவணத்தின் படி ஓட்டுநர் உரிமம், காப்பீட்டுச்சான்று, ஆகியவை ஆய்வின் போது முன்னிலைப்படுத்தப்படவில்லையென்றால் சரிதான். இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட T N 37 A X 0162 என்ற சரக்கு வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **எ.சா.ஆ.3**. மேற்படி எ.சா.ஆ.3 ஆவணத்தின் படி வாகனத்திற்குறிய ஆவணங்கள் அனைத்தும் விபத்தின் போது நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட மற்றொரு

வாகனமான T N 99 E 1302 என்ற லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **எ.சா.ஆ.4.** ஆக தாக்கல் செய்கின்றேன். மேற்படி எ.சா.ஆ.4 ஆவணத்தின் படி வாகனத்திற்குறிய ஆவணங்கள் அனைத்தும் விபத்தின் போது நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட T N 61 U 8437 என்ற இருசக்கர வாகனத்திற்கு சோதனை அறிக்கை வழங்கவில்லையென்றால் நீதிமன்ற அழைப்பாணையில் அந்த அறிக்கை குறித்து குறிப்பிடவில்லையென்பதால் அந்த ஆவணத்தை கொண்டு வரவில்லை. அதனால் அந்த விபரம் குறித்து தெரியவில்லை. எ.சா.ஆ.2 ஆவணத்தில் C R Issued என்று குறிப்பிடவில்லையென்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை:– இல்லை.</u>**

**ஒப்பம்/–சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**